238

போதனை விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்

238
MAY 1944
MADRAS

Editor & Publish... A. Lourduswami, B.A., L.T.
R... ...ining School, Trichinopoly.

JL
ணா2 11, M11PP
M44·34·9
189991

... மார்ச்சு 1944 மலர் 9

...முறை பாடசாலை, திருச்சினப்பள்ளி.

...சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணா 2.

போதனா விஷய பூங்கொத்து

பொருளடக்கம்

		பக்கம்
1.	பத்திராதிபர் குறிப்புகள்	141
2.	சென்னை கல்வி இலாகா	143
3.	தமிழ் உச்சரிப்பு	144
4.	சில நெல்வகைகள்	145
5.	என்ன செய்தல்வேண்டும்?	146
6.	பாடக்குறிப்பு	147
7.	சிறுவர்களுக்கு எண் போதனை	148
8.	சிறு கதை	150
9.	இருசொல் அலங்காரம்	151
10.	பச்சைமலையும் அம்மக்கள் வாழ்க்கையும்	152
11.	உங்களுக்குத் தெரியுமா?	153
12.	பரிக்ஷையும் பயமும்	155
13.	விடுகவி விடைகள்	157
14.	தின்பண்டங்களின் திருவிளையாடல்கள்	158
15.	பெற்றோர் சங்கங்கள்	159
16.	யோசனைக் கணக்கு	160

Rates of Advertisement

PERIOD	HALF PAGE			FULL PAGE		
	Rs.	As.	Ps.	Rs.	As.	Ps.
1 Month	4	0	0	7	8	0
3 Months	11	0	0	20	0	0
6 Months	20	0	0	35	0	0
1 Year (11 Issues) ...	30	0	0	55	0	0

போதனு விஷயப் பூங்கொத்து

கொத்து 34] 15 மார்ச்சு 1944 [மலர் 9

பத்திராதிபர் குறிப்புகள்

18992

New Admission.—அடுத்த ஜூலை மாதம் நம் போதனு முறைப் பாடசாலையில் போதனுமுறைப் பயிற்சிக்காக, ஸெக்கண்டரி கிரேடு, எலிமெண்டரி கிரேடுகளில் புது மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். சேர விரும்புகிறவர்கள் இதனடியில் வரும் விதிகளை நன்கு கவனிக்கக்கடவர் :—

1. இப்பாடசாலையில் அச்சிட்டுள்ள அப்ளிகேஷன் பாரத்தை (Application Form) வாங்கி, அதைப் பூர்த்தி செய்து அதை அடுத்த மே-மீ 31-ம் தேதிக்குள் இப்பாடசாலைத் தலைமை ஆசிரியருக்கு அனுப்பவேண்டும். பாரம் வரவழைத்துக்கொள்ள விரும்புகிறவர்கள் பாரம் ஒன்றுக்கு 2 அணு வீதம் தபால் ஸ்டாம்பு அனுப்பி தேவையான பாரங்களைப் பெற்றுக்கொள்ளத்தகும்.

2. ஸெக்கண்டரி கிரேடில் 40 மாணவர்களையும், எலிமேண்டரி கிரேடில் 80 மாணவர்களையும் சேர்த்துக்கொள்ள இங்கு வசதியுண்டு.

3. ஷை விஷயமாய் அடுத்த ஜூன் மீ 30-ம் உ வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அபேக்ஷகர்கள் இப்பாடசாலைத் தலைமை ஆசிரியரின்முன் ஆஜராகவேண்டும். ஆஜரானவர்கள் ப்ரவேச பரீட்சை எழுத ரூ. 2–0–0 ப்ரவேசக் கட்டணம் செலுத்திப் பரீட்சை எழுதவேண்டும். அப்பரீட்சையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

குறிப்பு: ஷை பரீட்சைக் கட்டணம் ரூ. 2-ல், பரீட்சை நாளன்று சாப்பாடு, இடவசதி, வினு, விடைப்பத்திரங்கள் முத லியவற்றிற்கேற்படும் செலவுகள் அடங்கும்.

4. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் சேர்க் கைத்தினத்தன்று ரூ. 10 டிபாசிட் (Deposit) பணம் கட்ட வேண்டும்.

5. ஷை டிபாசிட் கட்டுவதோடு இப்பாடசாலை போர்டிங் கில் (Boarding) சேர்ந்து படிக்க, போர்டிங் அட்வான்ஸ் (Advance) ரூ. 15–0–0 கட்டிச் சேரவேண்டியது அவசிய மாகும்.

குறிப்பு: எலிமெண்டரி கிரேடுக்கு வழக்கம்போல் ஸர்க்கார் ஸ்டைபெண்டு (Stipends) அளிக்கப்படும்.

* * *

வெள்ளிப்பதக்கப் பரிசு.—இந்த வருஷ T. S. L. C. பரீட்சையில் முதன்மையாகத் தேறி முதல் மார்க்கு பெறும் ஸெக்கண்டரி கிரேடு மாணவனுக்கும், அவ்வாறே எலிமெண்டரி கிரேடில் முதல் மார்க்கு வாங்கும் மாணவனுக்கும் வழக்கம் போல் இப்பாடசாலைத் **தலைமை ஆசிரியரால்** ஒவ்வொரு வெள்ளிப்பதக்கம் பரிசாக அளிக்கப்படும்.

* * *

திருச்சி ஜில்லா உதவி கல்வி ஆபீஸர் (Personal Assistant to the D. E. O.) திரு. S. வீராஸாமி பத்தர், M.A., L.T. அவர்கட்குப் பாராட்டு.

யுத்த சேவையில் தாம் ஈடுபட்டும், அநேகம் அநேகரை யுத் தத்தில் சேர்ந்து சேவைபுரியுமாறும் ஊக்கியும் அரிய தொண் டாற்றி வருகின்ற நம் ஜில்லா உதவி கல்வி ஆபீஸர் திரு. S. வீராஸாமி பத்தர் அவர்களது அயரா உழைப்பை அர்சாங்கத் தார் அங்கீகரித்து அதற்குச் சான்ருக மே. த. இந்தியா **பிரதம சேனுதிபதியவர்களது** பெயரால் (H. E. The Commander-in-Chief in India) அன்னவர்க்கு **ஸன்னது** (Sanad) அளித்துள்ளார்கள் என்பதைப்பற்றியறிந்து நாம் பெரிதும் மகிழ் வுறுகின்றோம். அரசாங்கத்தார் நமது ஜில்லா உதவி கல்வி ஆபீஸர் அவர்களைப் பாராட்டியிருப்பது இந்த நம் ஜில்லாவுக்கே ஒரு விசேஷ கௌரதையல்லவா !!

சென்னை கல்வி இலாகா

[Fort St. George Gazette, dated 15—2—1944; Page 98]

T. S. L. C. பரீட்சை **1946**, தமிழ் பாடம்.—இதைப்பற்றிய அறிக்கை என்னவென்றால், ஸெக்கண்டரி கிரேடு, எலிமெண்டரி கிரேடுகளுக்கு, 1942-லும், 1943-லும் புதுத்திட்டத்தின்படி (Revised Scheme) வைத்திருந்த தமிழ் டெக்ஸ்டுதான் மீண்டும் 1946-ம் வருஷப் பரீட்சைக்கும் வைக்கப்பட்டிருக்கிறது என்பதே.

* * *

[Letter R. C. No. 58, E/43 dated 6-1-'44 from the Secretary to the Commissoner for Govt. Exms., Madras.]

VIII-வது வகுப்பு முடிவுப் பரீட்சை, தமிழ் பாடம். 1942-ம் வருஷத்தில் ஏற்படுத்திய பாடபுத்தகமே, 1946-ம் ஞிலி, ஏப்ரல் மாதத்தில் நடைபெறப்போகும் பரீட்சைக்கும் மீண்டும் வைக்கப்பட்டிருக்கிறது. மேலும் அந்த புத்தகத்தை, 1944-லும் 1945-லும் VII-வது வகுப்பிற்கே பாடபுத்தகமாக ஏற்படுத்திக்கொள்ளலாம். இதனுல் அப்புத்தகத்தை VII, VIII வகுப்புகளில் முறையே இரண்டு வருஷங்கள் கற்பதினுல் மாணவர்கட்கு நல்லதோர் அனுகூலமும் அமைய ஏதுவாகின்றது.

"கல்வி"

(ஆரம்ப ஆசிரியர்கட்கு உதவும் தமிழ் மாதவெளியீடு)

இயற்கை — கணிதம் — விளையாட்டு
பூகோளம் — கதை — பாட்டு
சரித்திரம் — கைவேலை — செய்தி

முதலிய பகுதிகள் அடங்கியது.

* * *

ஒவ்வொரு இதழிலும்
பூகோள சித்திரப் படமும் **(Chart)**
கைவேலைச் சித்திரப்பட அநுபந்தமும் வெளிவரும்.

கட்டுரைகள் யாவும் பாடத்திட்டத்தை ஒட்டி எழுதப்பட்டவை.

வருட சந்தா ரூ. 3. மாதிரிப் பிரதி அணு 4.

EDITOR, **KALVI**, THYAGARAYANAGAR, MADRAS.

தமிழ் உச்சரிப்பு

(I. S. Xavier Fernandez.)

ஓர் பொருள் காற்றில் அசையும் போது சப்தம் உண்டாகிறது. அல்லது காற்றின் அணுத்திரள் திரண்டு விரைவாய் ஓர் குழல் வழியாய்ச் செல்லும்போதும் ஓசை அல்லது ஒலி பிறக்கின்றது. இவற்றிக்கு முறையே தோற்கருவி, துளைக்கருவி உதாரணமாகும்.

பாடை அல்லது மொழி ஒலியால் ஆகியது. வெவ்வேறு வகையான ஒலியினை உணர்த்த வரையும் வடிவமே எழுத்து. அதுபற்றி எழுத்துக்கள் வரிவடிவம், ஒலிவடிவம் என இரண்டு வகைப்படும். வரிவடிவம் நமக்குத் தெரிந்தவை. இனி எழுத்துக்களின் ஒலிவடிவத்தை ஆராய்வாம்.

ஒலிக்கலையைப்பற்றிக் கூறுமுன், ஒலித்தற்குக்காரணமான கருவியின் அமைப்பைப்பற்றி அறிதல்வேண்டும். அக்கருவி வாய். வாயில், முன்பல், உதடு, நாக்கு, மேல்வாய் இவற்றின் தொழிலால், மார்பு. (உரம்) கழுத்து (கண்டம், மிடறு) மூக்கு, தலை ஆகிய நான்கு இடங்களில் உள்ளிருந்து வெளிவரும் காற்று ஒலியாய்ப்பிறக்கிறது. முன்பல்லைத்தொடும் பகுதியாகிய நாக்கிற்கு, நுனிநா, அல்லது கடைநா என்று பெயர். நாக்கின் மத்திய பகுதிக்கு நடுநா, அல்லது இடைநா எனப்பெயர். நாக்கு தொண்டையோடு சேர்ந்திருக்கும் பகுதிக்கு, முதல் நா அல்லது அடிநா எனப்பெயர். இதுபோலவே நாக்கிற்கு மேல் இருக்கும் வாயின் கூரைக்கு அண்ணம் என்றும், தொண்டையை ஒட்டிய கூரை அல்லது மோட்டிற்கு முதல் அண்ணம் என்றும், மற்றவை முறையே இடை அண்ணம் கடை அண்ணம் என்றும் பெயர் பெறும்.

எழுத்துக்கள் எல்லாம், பிறக்கும் இடம்பற்றி நான்கு வகையாய்ப் பிரிக்கலாம். (1) மார்பில் பிறப்பன. (2) கழுத்தில் பிறப்பன. (3) மூக்கில் பிறப்பன. (4) தலையில் பிறப்பன.

1. வல்லினம் கசடதபற என்பன. இவை ஆறும் மார்பில் பிறக்கிறது.

2. பன்னிரண்டு உயிர் (அ, ஆ முதலிய) எழுத்துக்களும் இடையினமாகி 'யரல வழள' ஆகிய ஆறும் கழுத்தில் பிறக்கிறது.

3. மெல்லினமாகிய 'ங, ஞ, ண, ந, ம, ன,' ஆகிய ஆறும் மூக்கின் வழியாய்ப் பிறக்கிறது. இவற்றை உச்சரித்துக் காண்க. இதையே பவணந்தமுனிவர் நன்னூலில்,

"அவ்வழி
ஆவியிடைமை இடம் மிடறு ஆகும்
மேவு மென்மை மூக்கு; உரம் பெறும் வன்மை

என்று சூத்ரமாகக் கூறுகிறார்.

4. தலையில் பிறப்பன, தனிநிலை என்று அழைக்கப்படும் ஆய்த (ஃ) எழுத்து ஒன்றுமாத்திரமே. (உ.ம்) கஃசு

மேற்கூறிய மெல்லினம், இடையினம், வல்லினம், உயிர் ஆக நாற்கணத்தின் பிறப்பிடத்தையும் ஆய்த எழுத்தின் பிறப்பிடத்தைப் பற்றியும் இடம் பற்றிப் பார்த்தோம். இனி முயற்சிவகையால் பிறப்பை அறிவோம்.

மெல்லினமும் வல்லினமும் ஒன்றுக்கொன்று இன எழுத்துக்கள். கசடதபற முறையே ஙஞணநமன என்ற மெல்லினத்திற்கு இனம். க—ங என்ற இனஎழுத்து இரண்டும் பிறக்கும் இடத்தால் அன்றி, முயற்சி வகையால் வித்யாசமில்லை. இதுபோலவே ச, ஞ, ட, ண, த—ந, ப—ம, ற—ன, என்பவையும். ஆகவே முயற்சி வகையால் மெல்லினமும் வல்லினமும் ஆறுவகைப்படும். அவற்றை அடுத்த வெளியீட்டில் காண்க. (தொடரும்.)

சில நெல்வகைகள்

(A. Arulanandam, Vannampatti.)

சீரகச்சம்பா ; முத்துச் சம்பா ; செம்புளிச் சம்பா ; பொங்கல் சம்பா ; மணியன் ; கோரைச்சம்பா ; புனுகு சம்பா ; குத்தாலை ; கொடி வழுதலைச் சம்பா ; குங்குமச் சம்பா ; வரகு சம்பா ; வெந்தயச் சம்பா ; பெருஞ் சம்பா ; செம்பாளை ; பூம்பாளை ; வெண் சம்பா ; கைவிரைச் சம்பா ; ஏரிக் கருங்குறுவை ; காட்டாளி வாளன் ; ஈர்குச் சம்பா ; மிளகு சம்பா ; மட்டக்கார் ; பூங்கார் ; கடுக்காய்க் கார் ; குருவிக் கார் ; செங்கார் ; மணல்வாரி ; ஓலைச் சம்பா ; சூரிச் சம்பா ; கற்பூரச் சம்பா.

கடன் கொடுத்தவன் :—ஓய், கடன்காரரே, மரியாதையாய் இன்னும் இரண்டு நாட்களில் கடனைக்கொடுக்காவிடில் பல்லை பிடுங்கி விடுவேன். தெரியுமா என் சமாச்சாரம்?

கடன் வாங்கினவன் :—(பல் வலியுள்ளவன்) அப்பா, கடன் கொடுத்தவரே, ஏன் இரண்டு நாட்கள் தாமதம்? இப்போதே பிடுங்கி விடுரா. பொல்லா பல் வயித்தியன் மூன்று ரூபாய் கேட்கிறுன்டா! உனக்கு கோடி புண்ணியம்டா!

என்ன செய்தல்வேண்டும்?

(M. S. Sundaresa Aiyar, Tamil Pandit, Tindivanam.)

1. தமிழ் வசனநூல்

நந்தமிழ் வரலா றெல்லாம்
நயம்பட ஆங்கி லத்தில்
பந்தமா யெழுதி விக்கும்
பற்றுடைப் பரத நாட்டீர்!
விந்தையா யவர்கள் நூலை
விருப்புடன் மொழி பெயர்த்துச்
செந்தமி ழதனிற் காட்டிச்
செல்வ நாடாக்கு வீரே....

2. புத்தகசாலை

உத்தம மக்கள் வாழும்
ஒவ்வொரு ஊர்கள் தோறும்
வித்தகர் வழியில் வந்த
வீறுடைப் பரத நாட்டீர்!
சத்துவ குணங்க ளூட்டுந்
தமிழ்மொழி வளர்ச்சிக் காகப்
புத்தக சாலை வைத்துப்
புலமை நாடாக்கு வீரே....

3. தனிகர் தமிழுக்குதவல்

திண்மைசேர் மனத்தின் கண்ணே
சீரிய ஊக்கம் பொங்கி
உண்மையாய்த் தமிழுக் காக
உழைத்திடும் பரத நாட்டீர்!
வண்மைசேர் செல்வத் தோர்க்கே
வான்தமி ழுருசி காட்டித்
தண்மையால் பொருளை யீட்டித்
தரும நாடாக்கு வீரே....

1 MAY 1944
MADRAS

பாடக்குறிப்பு

வகுப்பு : III. நேரம் : 45 நிமிஷம்.

பாடம் : பூகோளம். பாகம் : திசைகள்.

நோக்கம் : ஓரிடத்தின் திசையறிதல் ; படத்தின் திசையறிதல்.

உபகரணம் : திசைகள் காட்டும் படங்கள்.

பீடிகை : வலதுபக்கம், இடதுபக்கம், முன்பக்கம், பின்பக்கம் முதலியவற்றைப்பற்றி சம்பாஷணை. (நோக்கம் வெளியிடுதல்.)

விஷயம் : 1. திசைகள் நான்கு : கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு.

2. படத்தின் தலைப்பக்கம் வடக்கு, அடிப்பக்கம் தெற்கு, வலதுகைப்பக்கம் கிழக்கு, இடதுகைப்பக்கம் மேற்கு.

முறை : 1. பையன்களை வெளியில் அழைத்துச்சென்று சூரியன் உதிக்கும் திசைப்பக்கம் திரும்பி நிற்கச்செய்து, இரு கைகளையும் பக்கங்களில் நீட்டும்படி செய்யவும். முன்பக்கம் (சூரியன் உதிக்கும் பக்கம்) கிழக்கு ; பின்பக்கம் (சூரியன் மறையும் பக்கம்) மேற்கு ; வலதுகைப்பக்கம் தெற்கு ; இடதுகைப்பக்கம் வடக்கு என்று சொல்லவும். பிறகு தென்கிழக்கு, வடகிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு என்ற திசைகளையும் அந்தந்தப் பக்கங்களில் திரும்பி நிற்கச்செய்து வருவிக்கலாம். (திசைகாட்டும் கருவி உபயோகித்தல்.)

2. எட்டுத்திசைகள் வரைந்த படத்தைத் தொங்கவிட்டுப் படத்தின் திசையறியும் விதத்தையும் போதிக்கவேண்டும்.

பயிற்சிகள் : 1. உன் பள்ளிக்கூடம் எந்தத் திசையைப் பார்த்துக்கொண்டிருக்கிறது ? 2. பள்ளிக்கூடத்துக்கு எந்தத் திசையில் உன் வீடு இருக்கிறது ? 3. பூர்த்திசெய்.

உனது ஊருக்கு	வடக்கேயுள்ள	கிராமத்தின்	பெயர்.	
	கிழக்கே	,,	,,	,,
	மேற்கே	,,	,,	,,
	தெற்கே	,,	,,	,,

189991

4. விளையாட்டு : விளையாடுமிடத்தில் எட்டுத்திசைகளையும் காட்டக் கோடுகள் போட்டு வட்டத்தின் நடுவிலிருந்து ஒவ்வொருவனைக் குறித்த திசையில் ஓடச்செய்தல்.

5. சித்திரம் : எட்டுத்திசைகளையும் காட்டும் படம் வரைதல்.

6. கைவேலை : அட்டையினால் திசைகாட்டும் கருவி செய்தல்.

சிறுவர்களுக்கு எண் போதனை

(D. Mariasusaimanikkam.)

(கொத்து 34, மலர் 8, பக்கம் 129-ன் தொடர்ச்சி.)

இவை முடிந்தபின் 10, 10 ஆக நூறுவரை எண்ணப் பழக்க வேண்டும். இதற்குச் சாதகமாக பத்துப் பத்துக் குச்சிகளாகச் சேர்த்துக்கட்டிய குச்சிக்கட்டுகள் வேண்டும். பிள்ளைகள் ஒரு கட்டு, இரண்டு கட்டுகள், மூன்று கட்டுகள் என முறையே கட்டுகளை எண்ணியும், 1 கட்டு ஒரு பத்து, 2 கட்டுகள் இருபது, 3 கட்டுகள் முப்பது குச்சிகள் என்று பழகவேண்டும். ஒரு பத்து, பத்து ; இரண்டு பத்து இருபது என, ஒன்பது பத்து தொண்ணூறுவரை கற்றபின், பத்து பத்துகள் நூறு (100) என்று அறியவேண்டும் ; இவ்வாறு 100 வரை பத்துப்பத்தாக ஏற்றவும் இறக்கவும் அப்பியாசப்படவேண்டும்.

பின்னர், 1 கட்டுடன் 1 குச்சி சேர்த்தால் பத்தும் ஒரு குச்சியும் ஆகிறது. 2 குச்சி சேர்த்தால் பத்தும் இரண்டு குச்சிகளும் ஆகிறது. இவ்வாறு 19 வரை கற்பித்தபிறகு 10-ம் 1-ம் 11 ; 10-ம் 2-ம் 12 எனக் கற்றல்வேண்டும். இதற்கு உதவியாகப் பொருத்து அட்டைகள் கையாளத்தகும். 10 1 = 1 | 1 = 11 ; இவ்வாறு 10-ம், 9-ம் 19 என்றும் ; 10-ம் 10-ம் 20 என்றும், 20 1 = 2 | 1 = 21 என்றும் பொருத்து அட்டைகள்மூலம் காட்டுக. 20 என்னும் அட்டையில் '0'-ன்மேல் 1 குறித்துள்ள அட்டையை வைத்துக் காட்டலாம்.

பிறகு பூஜ்ஜியத்தின் (0) கருத்தை விளக்கிக் காட்டவேண்டும். '1' ஒரு வஸ்துவைக் குறிக்கும் இலக்கம் என்பதைப்போல் '0' ஒன்றுமில்லாமையைக் குறிக்கும் ஒரு குறி என்பதை விளக்கவேண்டும். 10, 20, 30, 40 எனக் குறிக்கையில் பூஜ்ஜியம் (0) ஒன்றுகளின் ஸ்தானத்தில் ஒன்றுமில்லை என்பதைக் காட்டும் குறி இருப்பதைப் பிள்ளைகள் அறியும்படி செய்யவேண்டும். இச்சமயத்தில் எண்களின் சுயமதிப்பு ஸ்தானமதிப்பு இவற்றின் கருத்தையும் அறிதல் அவசியம். (உ-ம்.) '2' ஒன்றுகளின் ஸ்தானத்தில் இருக்கும்போது அதன் மதிப்பு 2 ஒன்றுகள். ஆனால் அது பத்துகளின் ஸ்தானத்திலிருக்கும்போது அதன் மதிப்பு இரண்டு பத்துகள் என்பதை விளக்கவேண்டும். இவ்வாறே நூறு, ஆயிரம் வரை, எண்களின் சுய மதிப்பு, ஸ்தானமதிப்பு சம்பந்தமான பயிற்சிகளைக் கொடுத்துப் பழகவேண்டும். இதற்கு உதவியாகப் பொருத்து அட்டைகளைக் கையாடலாம். எண்குறிப்பு அட்டைகள், ஸ்தானமதிப்பு வரிசை அட்டைகள்போன்ற உபகரணங்களைத் தயாரித்து உபயோகிக்கவேண்டும்.

கடைசியாக நூறிலிருந்து ஆயிரம்வரை எண்மானம் எண்குறிப்புப் போதித்தல். பொருள்களைப் பிள்ளைகள் எண்ணி எண்ணியே எண்ணறிவுபெற்றனர். ஆகவே சில பொருள்களைக் காட்டி இவை எத்தனை என்று கேட்கும்போது, காட்டிக் கேட்ட பொருள் எத்தனை என்பதைத் தெரிவிக்கின்றனர். அவர்கள் தெரிவிப்பதை எழுத்தால்

எழுதிக்காட்டும் எண்ணின் பெயர் எண்மானம். அவ்வெண்ணை இலக்கத்தால் காட்ட அது எண்குறியாகிறது. ஆறு என்பது எண்மானம்; 6 என்பது எண்குறி. 100-லிருந்து 1000 வரை எண்மானம் எண்குறிப்புப் போதிக்க முன்பு 10-ஐ ஓர் அளவாகக்கொண்டு 1000 வரை எண்ணியதுபோல இப்பொழுது 100-ஐ அளவாகக்கொண்டு 100 வரை முதலில் நூறு நூருகவும் பிறகு ஒன்று ஒன்ருகவும் கற்பிக்கலாம். குச்சிக்கட்டுகளை (100 குச்சிகள் அடங்கிய) வைத்துக்கொண்டு முன் போலவே 1 கட்டு 2 கட்டு என எண்ணப்பழக்கி ஒரு 100 குச்சிகள் அடங்கிய கட்டு ஒரு நூறு. 2 கட்டுகள் இரண்டு நூறுகள்...ஒன்பது கட்டுகள் ஒன்பது நூறுகள், பத்து கட்டுகள் பத்து நூறுகள் என்று சொல்லப் பழக்கவேண்டும். முன்பே இப்படியாக 100 வரை எண்ணி இருப்பதால் இதில் அதிக நேரத்தைச் செலவிட இடமில்லை. பிறகு ஒரு நூறு நூறு. இரண்டு நூறுகள் இருநூறு......ஒன்பது நூறுகள் தொள்ளாயிரம், பத்து நூறுகள் ஆயிரம் என போதிக்கவேண்டும். இவை முடிந்தபின் 10-லிருந்து 100 வரை (11, 12......21, 22 etc.) எண்ணியதுபோல எண்ணிப் பழக்கவேண்டும். இதற்குச் சாதகமாக பலவிதமான பொருள்கள், முத்துகள், சோழிகள், குச்சிகள் முதலிய உபயோகிப்பதுடன் பொருத்து அட்டைகளை உபயோகிப்பது சாலச் சிறந்ததாகும். மற்ற மேலுள்ள எண்கள் இவ்வாறு 1000 வரை கற்றபின் கற்பிப்பது எளிதாகும். அவற்றை 2, 3, வகுப்புகளில் பாலர்கள் வெகு சுலபமாய்க் கற்றறிவார்கள். இவ்வாறு போதனை முடிந்தபின் நாம் 100 வரையிலும் ஏற்பட்ட அறிவைச் சோதிக்கச் செய்ததுபோல பலவிதமான அப்பியாசங்கள் கொடுக்கவேண்டும். மேலும் 1 முதல் 1000 வரை எண்ணுவதற்கென்று நாம் போதனு பாடசாலையில் தயாரித்த எண் அட்டையைத் தயார்த்து வகுப்பறையில் தொங்கவிடுவது விரும்பத்தக்கது.

எண்களை வாசித்தலும் காட்டலும்

நாம் 100-லிருந்து 1000 வரை எண்மானம் எண்குறிப்பு கற்பிக்குமுன் இப்பழக்கத்தையும் திறமையையும் ஏற்படுத்தியிருக்கவேண்டும். 1000 வரை கற்பித்தபின்னும் இதனைக் கையாடுதல் கெடுதியன்று. நமது போதனையை பயனுள்ளதாக்கவல்லதோர் சிறந்த சாதனமாகும், இப்பழக்கம் என்பதில் ஐயமில்லை.

0-முதல் 100 வரை வாசிக்கவும் சொல்லவும், குறிப்பிட்ட எண்ணின் அர்த்தம். அதன் எண்மானம் எண்குறிப்பு, பொருள் இவற்றைத் தெளிவாய்க் கூறவும், குறிப்பிட்ட வஸ்துக்களைத் தேர்ந்தெடுக்கவும், எடுத்த பொருள்களுக்கும் மொத்தமாய் கூட்டத்திலுள்ள பொருள்களுக்குமுள்ள சம்பந்தமறிதல், வேண்டிய பொருளைப் பிரித்துவைத்தல்போன்றவற்றில் பழக்கப்படுத்தியும் மேற்படி திறமைகள் பிள்ளைகளிடம் அமைந்திருக்கும்படியும் செய்யவேண்டும்.

சிறு கதை

(A. Soosai Manicka Thaver.)

சுந்தரத்தின் தந்திரம்

சிறுவனும் சிறுமியும் நாள்தோறும் ஆற்றங்கரைக்குச் சென்று, அங்கு காணும் இயற்கை வனப்புக்களையும், பறவைகளின் இனிய ஓசைகளையும் அநுபவித்து விளையாடி வருவது வழக்கம். தினம் போகும் பொழுது தாங்கள் வளர்க்கும், கிளி, புரு, வானம்பாடி முதலியவைகளைக் கொண்டுபோய் விளையாடிவிட்டு திரும்ப கூண்டிலடைப்பது வழக்கம். கமலா சிறிது பிடிவாதமுள்ளவள் என்று சொன்னால் மிகையாகாது. சிறிது நன்றாகப் பாட்டுப் பாடுவாள். சுந்தரத்திற்கு இளகக்கூடிய மனதாயிருந்தது. இவன் சாமர்த்தியமாகப் பேசக் கூடியவன். இருவரும் ஒரு வகுப்பில் படித்து வந்தார்கள்.

ஒருநாள் இருவரும் ஆற்றங்கரைக்குச் சென்றனர். கமலா பாடிக் கொண்டுபோவதை சுந்தரம் கேட்டுக்கொண்டே போனான்.

ஆற்றின் அலைகளும், பறவைகளின் ஓசைகளும், மரங்களின் கிளைகள்மோதும் சப்தமும் இவள் பாட்டுக்கு பக்கவாத்தியங்கள் கொடுப்பதுபோலிருந்தது. தோப்புக்குப் போனவுடன் கமலா கிளியுடன் விளையாடிக் கொண்டிருக்கும்போது சுந்தரம் மீன் பிடித்துக்கொண்டிருந்தான். 'திடீர்' என்று கமலா அழுதாள். ஓடிவந்து பார்த்த சுந்தரம், கிளியானது கன்னத்தில் கொத்திவிட்ட காரணத்தினால் அழுதாள் என்று அறிந்தான்.

கமலாவுக்குக் கோபம். கிளிக்கு ஆகாரம் ஒன்றும்போடாமல் வைத்திருந்தாள். சுந்தரம் எவ்வளவு சொல்லியும் கேட்டவளில்லை. ஆகவே சுந்தரம் அவன் தகப்பனாரிடம் அறிவித்தான். தகப்பனார் கமலத்தைக் கூப்பிட்டுக் கண்டித்தார். கமலம் தகப்பனார் சொன்னதைச் சகிக்க மாட்டாதவளாய் அழுதுகொண்டே படுத்துவிட்டாள். சிறிது நேரம் சென்றபின் எழுந்துபார்க்க, கண்ணின்று வடிந்த தண்ணீரைப் பருகிக் கொண்டிருந்தது கிளி. அதைப்பார்த்த கமலா கிளியின்மேல் சிறிது பற்றுகொண்டாளாயினும் பிறகு அவள் வருத்தம் தணிந்தபாடில்லை.

மறுநாள் வழக்கமாக ஆற்றங்கரையில் விளையாடும்போது, பட்சிகள் மூன்றும் ஏதோ பேசுவனபோல் கூடிக்கொண்டிருந்தன. அதைப்பார்த்த கமலா, சுந்தரத்தைக் கூப்பிட்டு என்னவோ பேசுகின்றன என்று அவைகளைச் சுட்டிக் காண்பித்தாள்.

சுந்தரம் தனக்குள் ஒருவாறு எண்ணிக்கொண்டு நல்ல சமயம் வாய்த்தது என்று எண்ணி, எனக்கு அவைகள் பேசுவது தெரியும், அதுவும் உன்னைப்பற்றிய பேச்சுத்தான் அவைகள் பேசுகின்றன என்று

விநயமாய்ச் சொன்னான். கமலா என்னவென்று வற்புறுத்திக் கேட்க, "கிளியானது உனது உதடு கன்னங்களின் சிவந்த தன்மையைப் பார்த்துப் பொறுமைப்படுவதாகவும், வானம்பாடியானது உன்குரலைப் பார்த்து அதன் குரலுக்கு பங்கம் வருகிறதாகவும், புறுவானது, நீ, அடிக்கடி மாற்றும் வெண்ணிற ஆடைகளைப் பார்த்து தன் தூய்மைக்கு மோசம் வந்து விடுகிறது என்றும்" கூடிய சீக்கிரம் இவளை விட்டுத்தப்பிக்க வழிதேடவேண்டும் என்றும் பேசிக் கொள்கின்றன என்று சுந்தரம் முடிக்குமுன், மூன்று பறவைகளும் 'சட்' என்று கேட்ட சப்தத்தைக்கேட்டு பயந்து பறந்தன. கமலம் தலைகுனிந்தவண்ணம் இருந்தபோது சுந்தரம் பறவைகளைக் கல்லால் எறிந்து விரட்டியதைக் கவனித்தாளில்லை. ஆகவே நிசம் என்று நம்பினாள். துக்கத்துடன் வீடு செல்லும்போது நான் இனிமேல் பறவைகளை ஹிம்சை செய்து அவைகளுடன் விளையாடுவதில்லை என்று சுந்தரத்தினிடம் வாக்களித்தாள். சுந்தரம் தன் தந்திரத்தை வெளிப் படுத்தாமல் தந்தையிடம் போய் தெரிவித்து சந்தோஷப் பட்டான். தகப்பனாரும் சிறுவனின் புத்தி நுட்பத்தை வியந்து, கமலாவுக்கு உண்மையை உரைத்து சந்தோஷப் படுத்தினார். கமலாவும் சுந்தரத்தின் தந்திரத்தை மெச்சி, தனது வாக்கையும் நிறைவேற்றினாள்.

தமிழ்நாடு ... 600 008
|89991|

இருசொல் அலங்காரம்

1. திங்கள் வருவதேன்? திருவிளக்கு ஏற்றுவதேன்?
   (ஞாயிறு போய்)
2. வெந்தகறிமணப்பதேன்? வேந்தர் படை முறிவதேன்?
   (பெருங்காயத்தால்)

M. Devaraj, Sengattupalli.

3. நனாநாவன்னா ஆவதேன்? நாற்காலி முக்காலி ஆவதேன்
   (காலையிட்டு)
4. யானை வரும் அரவம் அறிவதெதனால்? யாரும் உத்யோகம் ஆள்வதெதனால் (மணியால்)
5. தாறு ஆவதெப்படி? தலை வாறுவதெப்படி (சீப்பால்)

S. Madalaimuthu.

32
[illegible] M11PP
N44349

பச்சைமலையும் அம்மக்கள் வாழ்க்கையும்

(A. Jesudoss, Teacher.)

இம்மலையானது திருச்சிராப்பள்ளி ஜில்லாவின் வட எல்லையாக கிழக்கு மேற்கில் சுமார் 20 மைல் நீளத்தில் உள்ளது. பலவித மரம், செடி, கொடிகள் நிறைந்து பசுமை நிறமாகத் தோன்றுவதால் இதற்குப் பச்சை மலை எனப் பெயர் வந்தது. மலையின்மேல் சில இடங்கள் சரிவாகவும், சில பள்ளமாகவும், சில இடங்கள் சமதரையாகவும் சுமார் 10 முதல் 12 மைல் அகலத்தில் பரந்துள்ளது. இந்த சமதரையுள்ள இடங்களில்தான் மக்கள் வசிக்கின்றனர்.

இந்நாட்டினை 3 பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். 1. தென்பரநாடு. 2. ஆத்திநாடு 3. வண்ணாடு என்பனவாம். இம்மூன்று நாட்டிலும் சுமார் 100 குக்கிராமங்கள் உண்டு. ஒவ்வொரு கிராமத்திலும் சுமார் 15 முதல் 30 வீடுகள் தானிருக்கும். இவர்கள் யாவரும் விவசாயிகள்; பலசாலிகள். ஆண்பாலர் யாவரும் கச்சணம் மட்டுமே கட்டியிருப்பார். பெண்கள் இடையில் ஆடை அணிவர். நிலப்புறத்திற்கு வந்தால் மட்டும் நம் பெண்களைப்போல் உடுத்திக் கொள்வர். இவர்களது வீடு கூரையால் வேயப்பட்டு, காற்றோட்டமில்லாதது. தெருக்கள் சுகாதாரமுறைக்கு விரோதமானதாகக் காணப்படும். மக்கள் யாவரும் அசுத்தமாகவே தோன்றுவர்.

தொழில்:—இங்குள்ள யாவருக்கும் விவசாயம் செய்யமாத்திரம் தெரியும். ஒவ்வொருவர் வீட்டிலும் துப்பாக்கியுண்டு. காட்டுப் பன்றி, மான் முதலிய மிருகங்களை வேட்டையாடுவார்கள்.

கட்டுப்பாடு:—ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு தலைவன் உண்டு, அவருக்கு 'மூப்பன்' எனப்பெயர். அவருடைய வார்த்தையின்படியே அக்கிராமத்தார்கள் நடக்கவேண்டும். ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு பெருந்தலைவன் உண்டு. அவருக்கு 'கவுண்டன்' எனப்பெயர். மற்ற கிராம வாசிகள் இவரைக்கண்டால் நெற்றி தரையில்பட விழுந்து வணங்க வேண்டும். கிராம பெரும் சச்சரவுகள் யாவும் இவரே விசாரித்துத் தீர்ப்பு செய்ய வேண்டும். மீறி நடப்பவர்களை 'ஜாதி கட்டுப்பாடு' என்று அவர்களோடு யாரும் எவ்வித உறவும் வைத்துக்கொள்ளாமல் கட்டுப்பாடு செய்துவிடுவார்கள். சிறிது காலத்திலேயே மீறியவர்கள் தாமே கட்டுப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும்.

விளைபொருள்கள்:—பூமி செழிப்பாய் இருப்பதால் மிகத்திறமையாக விளைகிறது. கேழ்வரவு, வரகு, சாமை, கம்பு, சிறிது நெல் இவையே அதிகம். தவிர எள்ளு, பயர், துவரை ஆமணக்கு முதலியவை விளைகிறது. பலாப்பழம் மிகுதியாக உண்டு. மழை தவறாமல் பெய்வதால் பஞ்சம் ஏற்படுவது இல்லை. இதனாலேயே

'மதவடிசாவியானாலும் மலையடி சாவியாகாது' என்பர். காடுகளில் சந்தனமரம், தேக்கு மூங்கில் முதலிய மரங்களும், கடுக்காய், கிழங்கு வகைகள், தேன் முதலியன ஏராளமாயுண்டு. இவையாவும் அரசாங்கத்தாரால் பரிபாலிக்கப்படுகிறது.

மிருகங்கள் :— புலி, சிறுத்தை, காட்டுப்பன்றி, காட்டுப் பூனை, காட்டு நாய், நரி, கரடி இவை மிகுதியாகக் காணப்படும்.

நாகரிகம் :— இவர்களை 'காராளர் வம்சம்' என்று கூறுவர் கல்வியறிவு இல்லாதவர்கள். நாகரிகமற்றவர்கள். பணக்காரர், ஏழை என்ற வித்தியாசமே தெரியாது. கபடு, சூது, தீண்டாமை முதலிய தீய குணங்கள் அவர்களிடத்தில் காண்பதரிது. இதைப் பற்றியே அவர்களை 'கபடற்ற காராளர்' எனக் கூறுவதுண்டு. தெய்வ பக்தியுடையவர்களானாலும் குருட்டு நம்பிக்கையுடையவர்கள். அற்பகாரியமானாலும் ஜோஸ்யம் பார்த்தே செய்வார்கள். அநாகரிகமற்றவர்களாயினும், பொதுவாக நல்லொழுக்க முடையவர்களெனக் கூறலாம். ஆரியர்களுக்குப் பயந்து மலைகளுக்குச் சென்ற திராவிடர்கள் என்று பல அறிஞர்கள் கருதுகிறார்கள்.

இங்கு மலேரியா ஜுரம் அதிகம். நிலப்புறவாசிகள் இரவில் இங்கு தங்கலாகாது. தங்கினால் ஜுரம் உண்டாகி அதிக ஆபத்து உண்டாக்கி விடும். ஆனால் மலைவாசிகளுக்கு இது ஒரு பெரிதல்ல. கவர்ன்மென்டார் கொய்னா மருந்து இனாமாகக் கொடுத்து உதவுகின்றனர்.

உங்களுக்குத் தெரியுமா ?

(M. Hirudayanathan)

1. ஒரு மண் புழுவை (Earth worm) இரு துண்டாக வெட்டினால் உடனே இறந்துவிடுகிறதா ?

இம்மண்புழு ஒரு அதிசயமான ஜீவன். நாம் மண்வெட்டியால் அதை இரண்டாகத் துண்டித்துவிட்டபோதிலும் உடனே அது இறப்பதில்லை. மண்புழுவின் தேகக்கட்டு பலவளையங்களாலானது. கொக்கிகளால் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பாகமும் சுயேச்சையாக நகரமுடியும். இரு துண்டாக்கப்பட்ட மண்புழுவின் தலைப் பக்கத்தில் வெட்டுண்ட இடத்தில் ஒரு புதிய வால்முளைக்க ஆரம்பிக்கிறது. ஆகையால் அது ஜீவிக்கமுடிகிறது. ஆனால் வால்பக்கம் வாய் இல்லாததால் ஆகாரம்கொள்ள வழியின்றி கூடிய சீக்கிரத்தில் இறந்துவிடுகிறது.

2. முதன் முதல் உருவங்களை கண்டுபிடித்தவர் யாரென்று தெரியுமா?

உருவங்களில் முதல் துவக்கமானது தற்கால சரித்திரத்தில் புதைந்து கிடக்கிறது. ஆனால் நமக்குத் தெரிந்தவரையில் இவைகள் ஆதியிலிருந்து இந்துக்களால் கையாடப்பட்டுவந்தது. அநேக நூற்றுண்டுகளுக்குமுன் எண்களைக் குறிப்பதற்காக எழுத்துக்கள் உபயோகப்பட்டுவந்தது. இதை முதன் முதலில் ரோமானியர் கையாண்டனர். பிறகு அவர்கள் தாங்கள் ஜெயித்த நாடுகளிலும் பிரிட்டனிலும் அதை பரப்பினார்கள். ரோமானியரின் எண்கள் M. D. C. L. x, v. 1 உதாரணமாக 1933 என்பது M. C. M. XXXIII என்று எழுதப்பட்டது. கொஞ்ச காலத்திற்குபின்பு நாம் இப்பொழுது உபயோகிக்கும் எண் குறிப்புக்கள் அரேபியரிடமிருந்து வந்தது.

3. எதிரொலி என்பதென்ன?

சப்தத்திற்கு வெளிச்சத்தைப்போல பிரதிபலிக்கும் தன்மையுண்டு. ஆகையால் எதிரொலி என்பது பிரதிபலிக்கப்பட்ட சப்தமேயாகும். சப்தம் யாதொரு தடையுமின்றி பரவும் வகைக்கும் இவ் வெதிர் ஒலி இருக்கும். சுற்றிலும் நிசப்தமாய் இருந்தால்தான் எதிரொலி கேட்கும்.

4. ஏன் அணிலின் வால் அடர்த்தியான ரோமங்களை உடையதாயிருக்கிறது?

இரு காரணங்களை முன்னிட்டு அதன் வால் "பிரஷ்" ஐப்போல் இருக்கிறது. முதலாவதாக மழைகாலத்தில் அணிலானது அதிக நேரம் தூங்கும்போது தன் முகத்தையும் முதுகையும் மூடிக்கொள்ள ஒரு நேர்த்தியான கம்பளம்போல் உதவுகிறது. இரண்டாவதாக கோடைகாலத்தில் அணில் அங்குமிங்கும் மரங்களில் தாவி ஓடும் போது அதன் வால் ஒரு துடுப்புபோல பிரயோஜனப்படுகிறது. ஒரு கிளையிலிருந்து இன்னொரு கிளைக்கு தாவ இவ்வால் அதிக பிரயோஜனமுள்ளதாய் இருக்கிறது.

5. ஒரு சங்கை நாம் காதில் வைத்தால் அலைபோன்ற சப்தம் கேட்கும் காரணம் தெரியுமா?

அச்சங்கிற்கு இயற்கையாகவே அச்சப்தம் கிடையாது. வெளியுலகத்தில் எப்போதும் சப்த அலைகள் தாக்கிக்கொண்டே இருக்கிறது. அவ்வலைகளை இச்சங்கின் ஓடு இழுத்து அதை பலப்படுத்தி பிரதிபலிக்கிறது. நிசப்தமான ஒரு அறையினுள் போய் சங்கை நம் காதில் வைத்துக் கேட்டால் அந்த சத்தம் கேட்பதில்லை.

"பரிக்ஷையும் பயமும்"

(M. Henry Samuel)

மார்ச்சு மாதம் வருகிறது என்றால் மனம் பதைக்கின்றனர் பல மாணவர்கள். ஏன்? தாங்கள் இரண்டு வருடமாய்ப் படித்ததை வெளியிடும் மாதம் அதுவே. கண்டிப்பாய் பரிக்ஷை என்றால் பயம் சூழ்ந்துவிடுகிறது. அதுவும் மார்ச்சு மாதம் தொடங்கிவிட்டால் கேட்க வேண்டியதில்லை. பயத்திற்கு இருங்களூர் போதனாமுறை பள்ளியில் 1943-ம் வருடம் மார்ச்சு மாதம் முதல் மேதி வகுப்பு கரும்பலகையில் "Only 16 days for our Examination" என்று எழுதிப்போட்டு எங்களை அலட்டிவிட்டார் வகுப்பு சட்டாம்பிள்ளை ரத்தினவேல். எப்படியோ பரிக்ஷையை எழுதிமுடித்தோம். நல்ல தேர்ச்சியும் காட்டிவிட்டோம் எங்கள் பள்ளியில். இவ்வருடம் பரிக்ஷை எழுதப் புகும் எட்டாம் வகுப்பு; போதனாமுறை வகுப்பு; இ. எஸ். எல். ஸி. மாணவ, மாணவிகளுக்கு சொல்லுகிறேன். பரிக்ஷை ஹாலுக்குச் செல்கையில் சற்றும் அஞ்சவேண்டாம். பயமே உங்களுக்குவரும் நல்ல உத்திரவுகளை தடுத்துவிடும். (இதைத்தான் போதனாமுறை மாணவர்கள் 'பாலரியல்பில்' படித்திருப்பீர்களே !) ஆதலால் தைரியமாய் பரிக்ஷை ஹாலுக்குச் செல்லுங்கள், எழுதுங்கள் பரிக்ஷையை. பெறுங்கள் வெற்றியை.

பரிக்ஷைக்காகப் பல மாதங்களாகத்தான் படித்திருப்பீர்கள். மார்ச்சு மாதம்மட்டும் பல மாணவர்களோடு சேர்ந்து கேள்வி கேட்டு படியுங்கள். இதைத்தவிர அதிக நன்மை பயக்கும் படிப்பு வேறில்லை. மார்ச்சு மாதத்தில் பல ஹாஸ்டலில் நடக்கும் சம்பவங்கள் ஹாஸ்ய ரஸம் பொருந்தியதாக இருக்கும். நான் படித்தபொழுது பல மாணவர்கள் சாப்பாட்டைக்கூட மறந்துவிடுவார்கள். விளையாட்டில் மிகுந்த ஆர்வமுடைய மாணவர்களும் விளையாடாமல் புஸ்தகமும் கையுமாய் புளிய மரத்தில் காட்சியளிப்பார்கள். (பேயல்ல இருங்களூரில் புளிய மரங்கள் அதிகம். ஆதலால் அதன்மேலமர்ந்து பரிக்ஷைக்கு படிப்பவர் சிலர்) சிலருக்கு வீட்டிற்கு கடிதம் எழுதக்கூட நேரமில்லாமல் போய்விடுகிறது படிக்கும் மும்முரத்தில். படித்ததிலே என்ன சார் கேள்வி வந்தது 43-ம் வருடம்?—தமிழைத் தவிர இனி பரிக்ஷை எழுதவேண்டிய விதத்தை சொல்லுகிறேன்.

பரிக்ஷை ஹாலுக்குள் நுழைந்ததும் சற்று நேரம் கடவுளை தியானியுங்கள். (கடவுளே இல்லை என்னும் பிரஹஸ்பதிகளுக்கு இங்கு சொல்ல ஒன்றுமேயில்லை.) இதற்குள் பரிக்ஷை கேள்விகள் உங்களிடம் கொடுக்கப்படும். பன்முறை கேள்விகளையும், அதன் மேலுள்ள குறிப்புகளையும் படியுங்கள். குறிப்புகளை அவசியம் பன்முறை பாருங்கள். குறிப்புகளில் "கடைசி கேள்விக்கும் ஏதாம் 5

கேள்விக்கும் விடையளிக்க" "முதல் மூன்று கேள்விக்கும் ஏதாவது 2 கேளவிக்கும் விடையெழுதுக" என்னும் விஷயங்களைக் காணுவீர்கள். இவை ஒன்றுமே இல்லாவிடில் எல்லாக்கேள்விக்குமே விடையெழுதி விடுங்கள். பரிக்ஷை எழுதுகையில் நேரத்தைப் பார்த்து அதற்குத் தக்கவாறு எழுதுங்கள். தெரிந்த கேள்வி எக்கச்சக்கமாக அகப்பட்டுக் கொண்டது என்று ஒன்றிலேயே நேரம் போக்கிவிடாதீர்கள். நான் அப்படித்தான் ஒரே கேள்விக்கு $2\frac{1}{2}$ பக்கம் பதிலை ஒரு மணி நேரம் வரையிலும் எழுதிவிட்டு மற்ற கேள்விகளுக்கு நேரமில்லாமல் விழித்தேன். இது நிற்க.

பரிக்ஷை கேள்விகளுக்கு உங்கள் சொந்த தமிழ்நடையில் உத்திரவு அளியுங்கள். புஸ்தகத்திலுள்ள வார்த்தைகளையே எழுதினால் திருத்துபவர்களுக்கு உங்களுடைய பதில் ஸாரமற்றதாகக்காணப் படும். உதாரணமாக: "யாக்ஞவல்கிய மகரிஷி தமது சீடர்களுக்கு மோரைப்பற்றி கூறியது யாது? என்ற கேள்வி (எட்டாம் வகுப்பு-தமிழ்) வந்துவிட்டது என வைத்துக்கொள்வோம். உடனே நல்ல கேள்வி வந்ததுடா! என்று புஸ்தகத்திலுள்ள "மோர் சலுப்புள்ள தாயினும்.........மோரினால் நிவர்த்தி செய்தான்." வரையிலும் எழுதினால் திருத்துபவருக்குப் பாராமல் படித்து எழுதிவிட்டான் என்று தோன்றும். மார்க்கு போடுவதைப்பற்றி தெரியாது. இதற்குப் பதில் ஒரு புருஷன் ஒரு வைத்தியனைப் பார்த்து "எனக்கு மோர் வேண்டும், மரணம் வரினும் வருக; இல்லையேல் வேறு ஜென்மம் கிட்டட்டும்" என்றான். அவனுக்கோ சன்னிபாதம் என்னும் கொடிய சுரம் உள்ளது. மோரோ சலுப்புள்ள வஸ்து...... என்று சொந்த நடையில் எழுதினால் வாசிப்பவருக்கு மனமகிழ்ச்சியைக் கொடுக்கும்.

"பாலர்களுக்கு மறதியும் அவசியம். என்பதை விளக்கு" என்று (போதனாமுறை வகுப்பு, பாலரியல்பு) கேள்வி வருகிறது. என வைத்துக்கொள்ளுங்கள்; உடனே "பாலர்களுக்கு சில சமயங்களில் மறதியும் வேண்டும்; ஏனெனில் சிற்றன்னையினிடம் துன்பப் படும் குழந்தைகள் மறுநிமிடம் அதை மறக்காவிடில் அதை நினைத்து வருந்தி மனநோய்க்கு ஆளாகக்கூடும். இதுபோலவே ஆசிரியர்களிடம் படும் தண்டனையையும் மறக்க மறதி அவசியம். மறதி இல்லாவிடில் மனநோய்க்கு ஆளாகக்கூடுமல்லவா? மனநோய்க்கு (பின்) மருந்துண்டோ?"......என்று எழுதினால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

கடைசியில் படம் போடும் கேள்விகள் வந்தால் உங்களுக்கு நிச்சயமாய்த் தெரிந்தால் போடுங்கள். இல்லையேல் போடவேண்டாம். சென்னையை இமயமலைக்குப் பக்கத்தில் போடுவதைவிட போடாமலிருப்பது மேலல்லவா? வீணாக மேற்கூறியவாறு போட்டு நமது அறிவு மட்டு என்பதை ஏன் விடைத்தாள் திருத்துபவருக்குக் காட்ட வேண்டும்?

பரிக்ஷைக்குச் செல்லுமுன் ஒரு அர்த்தத்திற்கு பல பதங்கள் இருப்பதைப் பார்த்து செல்லுங்கள். உதாரணமாக: விளர்ச்சியாட்டு; ஓய்வுநேரப் பொழுதுபோக்கு; காலப்போக்கு முதலிய பதங்கள் யாவும் ஒரே அர்த்தமுடையவைதான். இதுபோல் இன்னும் எத்தனையோ பதங்கள் இருக்கலாம். அவை யாவும் தெரிந்துகொண்டு போங்கள். பரிட்சை எழுதி முடித்ததும் மறுபடியும் ஒருமுறை அதைத் திருப்பிப் படியுங்கள். சரி என்று உங்களுக்கே தெரிந்தால் வைத்துவிட்டு வெளியேறுங்கள்.

வெளியே போய் மற்றப் பையன்களுடன் உங்கள் உத்திரவை உடனே ஒப்பிட்டுப்பாராதேயுங்கள்; எல்லா பரிக்ஷையும் முடிந்தவுடன் பாருங்கள். இல்லையேல் நீங்கள் தப்பிதமாய் எழுதிவிட்ட ஒரு உத்திரவுக்காக அதிக கவலையுறவேண்டும். அது அடுத்த பரிக்ஷைக்கு உத்திரவு எழுத தடையுண்டாக்கும்.

தைரியமாய் பரிக்ஷை எழுதுங்கள். அடுத்த வருடமும் இந்த ஹாலுக்கு வரவேண்டுமோ (பரிசோதகராக அல்ல) என்று நினைக்காமல் வெற்றி நிச்சயம் என்று பரிக்ஷை எழுதுங்கள். எல்லா பரிக்ஷையையுமே தைரியமாய் எழுதுஙகள். ஜூன் மாதம் உங்கள் பேரும் கெஜட்டில் (பாஸ் என்று) வரும்.

தைரியமாய் எழுதுங்கள்! வெற்றி பெறுவீர்கள்!!

"பயமில்லாமல் எழுதும் பரிக்ஷை
பயனைக் காண பாருங்கள் கெஜட்டை"

MADRAS 1 MAY 1944

விடுகவி விடைகள்

(கொத்து 34, மலர் 8, பக்கம் 129)

விடைகள்: 1. அகப்பை. 2. பற்கள். 3. வெங்காயம். 4. (*a*) 16 முந்திரி = 1 மா; 4. (*b*) நால்காணி = 1 மா: அதாவது மாம்பழம்.

ஷ விடையளித்தவர்கள்: (1) சிவபெருமான், மாணவன் கிடார். (2) S. அற்புதஸ்வாமி ஆசிரியர் V. N. P. பாடசாலை, புத்தூர் திருச்சி. (3) G. செபஸ்தியான், வரதராஜன்பேட்டை. (4) B. M. Andrews Sebastian, Kajapet, Trichy.

தின்பண்டங்களின் திருவிளையாடல்கள்

(M. Sandanam, Teacher.)

எல்லாக்கிராமப் பாடசாலை, மாணவர்களைப்போலவே, பச்சரிசிப்பட்டி பாடசாலை மாணவர்களும், பாடசாலைக்கு வரும்பொழுதெல்லாம் பலவிதத்தின்பண்டங்களைக் கொண்டுவருவர். அப்பாடசாலை ஆசிரியர் ஆரம்பத்தில், இது ஒரு ஒழுங்கீனமான பழக்கமென்பதை உணராதவராய் "அந்தோ! மாணவர்கள் பசியின் கொடுமையாலன்றோ, தீனிக்கிப்படி பறக்கின்றனர் என எண்ணி அவர்களைக் கண்டிக்காமல் வாளா விருந்தனர். மாணவர்கள் பாடசாலை நேரத்தில் தின்பண்டங்களைக் கொணர்ந்துத் தின்றால், அவர்களின் வறுமைப் பிணி அறவே ஒழிந்துவிடுமென்பது, ஆசிரியர் கருத்துபோலும்.

இப்பழக்கமானது, மாணவர் மத்தியில், தனது திருவிளையாடல்களை ஊக்கமாக நடத்தி, மாணவரிடம், சோம்பல், பொய், களவு, வஞ்சகம் போன்ற தீயப்பழக்கங்களைக் குடிபுகச் செய்து, மாணவர், ஆசிரியர், பெற்றோர் ஆகிய இவர்களை அடியில் காணப்படும், சம்பவங்களால், அல்லலுறச் செய்தது.

பாடசாலையில் எப்பொழுதும், கடலைத்தோல், கரும்புஞ்சக்கைகள், இவைகள் வீசப்பட்டும், கம்பு, புழுங்கரிசி, சோளப்பொறி இவைகள் போன்ற தீனிகள் இரைக்கப்பட்டுங் கிடக்கும்: இவ்வசுத்தமான இடத்தில், நடமாடுவதாலும், நிலக்கடலையின் உரத்தினாலும், மாணவர்களின் உடலில் சொரிசிரங்குத் தேவித்தாண்டவமாடினாள்.

ஆசிரியர் பாடங்களை போதித்துக்கொண்டிருக்கும் பொழுது, பாடங்களைக் கிரகிக்காமல், ஒரு மாணவன் இரகசியமாகப் புழுங்கரிசியை வாயிலிட்டு சுவைத்துக்கொண்டிருப்பான். மற்ற மாணவர்கள், புழுங்கரிசிக்காக கண்ணடிப்பர். ஆசிரியரின் போதனையெல்லாம் செவிடன் காதில் சங்கூதியதைப்போல்தானிருக்கும். ஆசிரியர் இறுதிக் கேள்விகள் கேட்டால் சில மாணவர்கள், பரக்க, பரக்க விழிப்பார்கள், சில, "வாயிலிருக்கு வரவில்லை ஐயா" என்பர். ஆகையால் ஆசிரியர் தன் போதனையானது விழலுக்கிரைத்த நீர் போலாயிற்றே யென்று விசனமுறுவார்.

சில பெரிய மாணவர்கள் சிறியவர்களிடம் "நான் உனக்கு சிலேட்டுப்பென்சில் தருகிறேன், தின்பண்டங்கொடு" என்றும். சிலர். "தம்பி நீ நம்பகூட்டாளியாச்சே, எனக்குத் தீனிகொடு என்றும், சிலர் "தம்பி நீ அரிசிகொண்டுவா, சாமிகும்பிட்டு பின் தின்னலாம்" என்றும், தீனிகளை, காகத்தின்வாய்வடையை நரி அபகரித்ததைப்போல் அபகரித்து ஏமாற்றுவர். சிறுவர் தரையில் விழுந்து புரண்டு அழுவர்.

(தொடரும்.)

பெற்றோர் சங்கங்கள்

25—1—44-ல் அரும்பாவூர் போர்டு, ஆண், பெண் பாடசாலைகளின் பெற்றோர் சங்கக்கூட்டம் ஸீனியர் டெப். இன்ஸ். ஸ்ரீ நித்தியானந்தம் அவர்களது தலைமையின் கூடியது. பெற்றோரது கடமைகளைப்பற்றித் தலைவர் அரியதோர் பேருரை நிகழ்த்தியபின் மாணவர், மாணவிகள் ஆடல்பாடல்கள் நடத்தினர். தலைவர்க்கு நன்றி கூறப்பட்டது. அத்துடன் பெரம்பலூர் தாலூகா போர்டு ஆரம்ப ஆசிரியரின் யூனியன் நிர்வாகக் கமிட்டியின் கூட்டமும் நடைபெற்றதென ஷை யூனியன் காரியதரிசியும், ஷை பாடசாலைத் தலைமை ஆசிரியரும் தெரிவிக்கின்றனர்!

V. Jeganathan.

29—1—44-ல் தாத்தையய்யங்கார் பேட்டை ஆரம்ப ஆசிரியர் சங்க ஆண்டு விழா உதவிக்கல்வி அதிகாரி திரு. S. வீராசாமிப் பத்தர் அவர்களது தலைமையின்கீழ் வெகு விமரிசையுடன் நடைபெற்றதென, காரியதரிசி திரு. A. தேவதாஸ் ஜேம்ஸ் என்பவர் தெரிவித்திருக்கின்றனர்.

31—1—44-ல் பேரூர் லேபர் பாடசாலை பெ. சங்கம் திருச்சி தாலூகா ஜூனியர் டெப். இன்ஸ். தலைமையின்கீழ் சிறப்பாய் நடந்தது.

A. Jesudasan, Sacretary.

3—2—44-ல் கொடைக்கானல் R. C. டௌண் பாடசாலையில் பெ. சங்கம் கூடிற்று. முனிசிபல் கௌன்சிலர் ஸ்ரீ திருஞானம் பிள்ளையவர்கள் தலைமை வகித்தனர். மாணவர்கள் ஆடல்பாடல்களால் அனைவரையும் மகிழ்வித்தனர். தலைவர் புத்திமதிகள் கூறினபின் ரூ. 25 ஏழைப்பிள்ளைகளுக்கு உதவ நன்கொடையளித்தனர். வந்தன உபசாரங்களுடன் கூட்டம் கலைந்தது என ஆசிரியர் A. S. Ignatius அவர்கள் தெரிவித்துள்ளனர்.

7—2—44-ல் கிடார் போர்டு பாடசாலை பெ. சங்கம் ஸ்ரீ தாமோதரம்ரெட்டியார் அவர்களது தலைமையில் கூடிற்று. அவ்வமயம் "கல்வி இல்லாததால் வந்த கேடு" எனும் ஓர் சிறிய நாடகம் மாணவர்களால் நடத்திக்காட்டப்பட்டது. ராஜ வாழ்த்துடன் முடிவுற்றது.

S. Arokiasamy, H. M.

12—2—44-ல் திண்டுக்கல், பஞ்சம்பட்டி உயர்தர ஆண்பாடசாலை பெ. சங்கம் ஷை பாடசாலை மானேஜர் ஸ்வாமி அவர்களது தலைமையில் கூடிற்று. மாணவர்களால் அரிய சம்பாஷணைகளும் நடனங்களும் நடத்திக் காட்டப்பட்டன. தலைவர்க்கு நன்றி கூறப்பட்டதும் இராஜ வாழ்த்துடன் விழா இனிது முடிந்தது.

G. Arokiasamy.

பிரிவு உபசாரம் : 10—2—44-ல் கும்பகோணம் Little Flower Elementary School-ல் சுமார் 20 வருடங்கள் சேவைபுரிந்த ஆசிரியர் ஸ்ரீ P. Rathinam Pillai அவர்களுக்கு ஷை பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் ஒன்றுகூடி பிரிவு உபசாரம் கொண்டாடினர். Rev. Fr. M. Doraisamy, Ph. D; D.D., M.A., L.T. அவர்கள் தலைமை வகித்தனர். ஓய்வு எடுக்கும் ஆசிரியர்க்கு வாழ்த்துப் பத்திரங்கள் வாசித்துக்காட்டப்பட்டன. ஞாபகார்த்தமாய் வெள்ளிக் கோப்பை அன்னவர்க்கு அளிக்கப்பட்டது. தேநீர் விருந்துடன் உபசாரம் இனிது நிறைவேறியது,

S. Natesam Pillai, H. M.

18999

யோசனைக் கணக்கு

நான் நினைத்த ஒரு எண்ணை உம்மால் சொல்ல முடியுமா? உதாரணமாக, நான் "5" எனும் எண்ணை என் மனதில் நினைத்துக் கொண்டு, அதனை நீர் சொல்லும் என்றால் சொல்வீரா? விடையளிப்பவர்கள் வகையை விளக்கிக்கூறவேண்டும். "மலரன்பன்"

தாயார் :—தினமும் அதிகாலையில் எழுந்து படித்தால் என்னம்மா வரும்?

கமலம் :—பள்ளிக்கூடத்தில் நல்ல தூக்கம் வரும்மா.

T. Savarirajan.

வெற்றி

(B. Thomas Victor, Music Teacher.)

29, இராகம் ஹிந்துஸ்தானி திச்ரகதி ஆதிதாளம்

(சல்ரநௌஜவான் என்ற மெட்டு)

பல்லவி

தாஸ ஸாரி கரிஸ ஸாரி	தாஸ ஸாரி	கரி ஸா ; ‖
விக்ற்ற ரிஎன் போ . ம் ஜெய	விக்ற்ற ரிஎன்	போ . ம் . ‖
ரீம பாத பாம காரி	தாஸ ஸாரி	கரி ஸா ‖
ஜெக மீதில் ஆங்கி லர்க்கு	விக்ற்ற ரிஎன்	போ . ம் . ‖

சரணங்கள்

தாஸ ஸாரி கா, ; க	ரீஸ ரீக	ஸா, , ; ‖
ஆணுவம்கொண்ட. ஹிட்	லர ழிந்தி	ட . . ‖
காக பாக பா, ; ப	காப தாநி	பா, , ; ‖
ராணுவங்களும் பூ	வில் சிதைந்தி	ட . . . ‖
நீநி நிநீ நீநி நிதா	பாத பமா	கா, ; கரி ‖
காணும்வீரசிங்கக்கொடி	நின்ற சைந்தி	ட . . ஜெய ‖ (விக்ற்றரி)

2. ஞாயமின்றி போர் தொடுத்திடும் கோழை
பேயர்கள் கூடி பிடித்திடும் வேளை
நேய தேச வீரர்கள் முறியடித்திட. (விக்ற்றரி)

3. நள்ளிர வினில் குண்டுகள் வீசிடும்
கள்ள ஜெர்மனின் விமானமு மழிய
வெள்ளை வீர சேனைகூடி சுட்டுவீழ்த்திட. (விக்ற்றரி)

4. போர் முனைகளில் சீரழிந் திடும்
ஜெர்மன் சேனைகள் பேரழிந் திட
கீர்த்தி மேவும் ஆங்கிலர்கள் வெற்றி தாங்கிட. (விக்ற்றரி)

5. நீதியாளும் நல் செங்கோ லுயர்ந்திட
மேதினியில் புகழ் பரந் திலங்கிட
ஆதிதேவ ராஜனை தினம் துதித்து நாம். (விக்ற்றரி)

Reg. No. M. 1534

OUR EMPLOYMENT BUREAU

The **Bodhana Vishaya Poongothu** is being read every month by thousands of Teachers, hundreds of Teachers' Associations in addition to the numerous Pupil-Teachers in the Training Schools, throughout the Tamil-speaking Districts. This is the best medium of its kind for the advertisement of requirements of Schools. Short "Wanted" advertisements will be published on payment of Re. 1/- from Managers who are subscribers and Re. 1-8-0 from non-subscribers. The subscribing Managers shall quote their subscription numbers while placing an order at the concession rate in Our Employment Bureau.

THE EDITOR,
The Bodhana Vishaya Poongothu,
TRICHINOPOLY.

WANTED Two Secondary Grade Women Teachers a T. T. C. as head-mistress; the other may be a P. T. C.—Salary for the latter Rs. 30/- per month plus dearness allowance; for the first Rs. 35/- plus dearness allowance, if, in both cases, work is satifactory. For more particulars address.

THE MOTHER SUPERIOR,
R. C. Girls' Schools, Tindivanam,
South Arcot, District.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Supdt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.